[illegible] மக்கள்: 04 விலை ரூபா: 4.50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 02 ஏப்ரல் (10 - 04 - 1991) புதன்கிழமை ஓசை: 51

## விண்ணப்பங்கள் ஏற்பது இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களைப் பெறுவதற்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்வது இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அதன் பொறுப்பதிகாரி தெரிவித்தார். இதுவரை 35,000 விண்ணப்பங்கள் தேங்கிக்கிடப்பதாகவும், இதற்கு ஒட்டப்படும் முத்திரைகள், விண்ணப்பப்படிவங்கள் காணாமல் போவதி (4ஆம் பக்கம் பார்க்க)

# மன்னார்த்தீவில் புலிகளின் அதிரடிக்கு இன்ஸ்பெக்டர் உட்பட 9 பொலிஸார் பலி

## ஜீப் தீக்கிரை; ஆயுதங்கள் மீட்பு

(மன்னார்)

மன்னார்த் தீவினுள் சிறிலங்கா பொலிஸார் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலில் ஒரு இன்ஸ்பெக்டர் உட்பட ஒன்பது சிறிலங்கா பொலிஸார் பலியானதாகவும், அவர்கள் பயணம் செய்த ஜீப்வண்டியும் தீக்கிரையாக்கப்பட்டதாகவும், பொலிஸாருடைய ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டதாகவும் அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன. புலிகள் தரப்பில் எதுவித சேதமும் ஏற்படவில்லை எனவும் அச்செய்திகள் மேலும் தெரிவித்தன.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது; நேற்றுமுன்தினம் தலைமன்னாரிலிருந்து மன்னார்நகரப்பகுதிக்கு ஜீப்வண்டி ஒன்றில் சென்ற சிறிலங்கா பொலிஸார் மீண்டும் அங்கிருந்து தலைமன்னாருக்கு திரும்பி வரும்போது, துள்ளுக்குடியிருப்பு என்னுமிடத்தில் வைத்து விடுதலைப் புலிகள் தாக்குதல் மேற்கொண்டனர். துள்ளுக்குடியிருப்பு என்ற இடம் பேசாலையில் இருந்து ஒருமைல் தூரத்தில் உள்ளது.

புலிகளின் இத்தாக்குதலால் பொலிஸ் இன்ஸ்பெக்டர் உட்பட ஒன்பது பொலிஸார் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர் ஜீப்பிற்கும் தீயிடப்பட்டது. பொலிஸாரிடமிருந்து பல ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன புலிகள் தரப்பில் எவ்வித இழப்புகளும் ஏற்படவில்லையெனத்தெரியவருகிறது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் பொலிஸாரிடம் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

(மன்னார்)

மன்னார் தீவில் நேற்று முன்தினம் சிறிலங்கா பொலிசாரிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:

- ★ ரி 56 ரக துப்பாக்கி - 02
- ★ அதற்குரிய மகஸீன் - 08
- ★ 84 எஸ் ரகத் துப்பாக்கி - 04
- ★ அதற்குரிய மகஸீன் - 12
- ★ 84 எஸ்II ரகதுப்பாக்கி - 01
- ★ 5 56 ரவைகள் - 500
- ★ ஐ எம் ரவைகள் - 220
- ★ தொலைத்தொடர்புச் சாதனம் - 01

ஆகிய ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

## நானாட்டானில் மோதல்

(மன்னார்)

நானாட்டான் பகுதியில் விடுதலைப்புலிகளுக்கும், ஆயுதப் படையினருக்குமிடையே பலத்த மோதல் நடைபெற்றது. நேற்று முன்தினம் இம் மோதல் இடம்பெற்ற அதே வேளை வங்காலை முகாமில் இருந்து வெளியேறிய இராணுவத்தினர் சிறுநாவற்குளம் சுதி குடிமனைப்பகுதி நாகதாழ்வு பகுதிகளுக்குச் சென்றனர்.

## காரைநகரில் நேற்றும் விமானக் குண்டு வீச்சு

(காரைநகர்)

சிறிலங்கா விமானப்படையினரின் குண்டு வீச்சு விமானங்கள் நேற்று காரைநகர் கடற்படை முகாமின் சுற்றாடலில் குண்டுகளை வீசித் தாக்குதலை நடாத்தியுள்ளன. முகாமையண்டிய பகுதிகளில் உள்ள பொதுமக்களின் குடியிருப்புக்கள் சில இத் தாக்குதலில் சேதமடைந்தன. தொடர்ந்தும் முகாமில் இருந்து ஷெல் தாக்குதல்கள் இடையிடையே நடாத்தப்பட்டன. (க)

## சிறிலங்கா மீனவர்மீது மாலைதீவில் வழக்கு

(மாலே)

மாலைதீவுக் கடற்பிராந்தியத்தினுள் மீன் பிடித்ததாகக் கூறப்படும் நூற்றுக்கு அதிகமான சிறிலங்கா மீனவர்கள் தொடர்பாக அரசாங்கம் மாலைதீவுடன் தொடர்பு கொண்டுள்ளதென சிறிலங்கா வெளிநாட்டமைச்சு அறிக்கை விடுத்துள்ளது.

மேலும் சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் ஹரோல்ட் ஹேரத் மாலைதீவு வெளியுறவு அமைச்சருடன் தொடர்புகொண்டு பேச்சுவார்த்தை நடாத்தியபினால் எண்பது மீனவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

எனினும் மீதிமுள்ளவர்களின் மற்றும் தலைவர்கள் மாலைதீவு அரசாங்கத்தினால் (4ஆம் பக்கம் பார்க்க)

## வீர வணக்கம் வேணுகோபால்

குப்பிளான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்துடன் இடம்பெற்ற நேரடிமோதலில் வீரவேங்கை வேணுகோபால் திருக்கோணமலை) வீரமரணமடைந்தார்.

இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## போருக்குத் தீர்வுகாண சிறிலங்கா விரும்பவில்லை -திலகர்

(கொழும்பு)

தொடர்ந்து நடைபெற்று வரும் போருக்குத் தீர்வு காணும் விடயங்கள் பற்றிப் பேச்சுவார்த்தைகளைத் தொடங்க சிறிலங்கா அரசு ஆக்க பூர்வமாக விரும்புவது போலத் தெரியவில்லை என பாரிசிலிருந்து பி. பி. ஸிக்கு தொலைபேசி மூலம் பேட்டியளித்த புலிகளின் மூத்த பேச்சாளர் திரு. திலகர் கூறியுள்ளார் பரீட்சை நடாத்தத் திட்டமிடப்பட்டுவரும் சூழலிலேயே இராணுவம் கடந்தவாரம் தாக்குதல்களைத் தீவிரப்படு (4ஆம் பக்கம் பார்க்க)

அன்னைபூபதி ஞாபகார்த்த

## பொது அறிவுப் போட்டிப் பரீட்சை வெள்ளி நடைபெற ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

அன்னைபூபதி ஞாபகார்த்த பொது அறிவுப் போட்டிப் பரீட்சை நாளை மறுதினம் காலையும், மாலையும் மேற்பிரிவுக்கும், கீழ் பிரிவுக்கும் ஒரேநேரத்தில் இருபகுதிகளும் நடைபெறும் என விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கம் தெரிவித்துள்ளது.

பாடசாலை அதிபர்கள் தத்தமது கொத்தணி அதிபர்களிடம் பரீட்சைக்குரிய தமது பாடசாலை மாணவர்களின் அனுமதி அட்டைகளை இன்று பெற்றுக் கொள்ளுமாறும், மாணவர்கள் தமது பாடசாலைகளில் தமது அனுமதி அட்டைகளை வியாழன் காலை பெற்றுக்கொள்ளுமாறும் மாணவர் இயக்கத்தினர் கேட்டுள்ளனர். இதேவேளை அனுமதி அட்டை கிடைக்காத மாணவர்கள் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டு உள்ளனர். (மூ)

திருமலை மாவட்டத்தில்

## ஆயுதப்படையினர் அடாவடித்தனம் கொலை; ஆட்கடத்தல்; தீவைப்பு

(திருமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் கடந்த ஐந்தாம், 6ஆம் திகதிகளில் பெரும் அழிவு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். இரண்டு அப்பாவிப் பெண்கள், 3 ஆண்களுட்பட எல்லாமாக ஐந்துபேரை சுட்டுக்கொன்றதுடன், அறுபேர் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர். மேலும் சுமார் அறுபதுக்கும் மேற்பட்ட பொதுமக்களின் வீடுகளை எரித்து சாம்பராக்கி உள்ளனர்.

இந்த அழிவு நடவடிக்கை கள்பற்றி தெரியவருவதாவது: கடந்த ஐந்தாம் திகதி அன்று 52ஆம் கட்டையிலிருந்து பூமரத்தடிச்சேனை வரை யுள்ள அனைத்து தமிழ் பொதுமக்களின் வீடுகளையும், சச்சிலம்பத்தை இராணுவ முகாமைச் சேர்ந்த சிறிலங்கா இராணுவத்தினர் எரித்துவிட்டனர். இதனால் பூமரத்தடிச்சேனைக்கும், 52ஆம் கட்டைக்கும் இடையில் ஒரு மைல் நீளத்தில் உள்ள அனைத்து வீடுகளும் சாம்பராகியுள்ளன இந்தப்பகுதி வெறுமையாக வெறிச்சோடிய பிரதானவீதி (4ஆம் பக்கம் பார்க்க)

## புகழுடல் அஞ்சலிக்கு!

குப்பிளான் பகுதியைநோக்கி நேற்று பிற்பகல் நகரமுயன்ற இராணுவத்துடன் நேரடி மோதலில் ஈடுபட்டு இறுதிவரை தீரமுடன் போராடி வீரமரணத்தைத் தழுவிக் கொண்ட வீரவேங்கை வேணுகோபாலின் புகழுடல் நீர்வேலி பொலிட்டு சனசமூக நிலையத்தில் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்படும். காலை 10 மணி முதல் 1 மணி வரை இடம் பெறும். அஞ்சலி அதைத் தொடர்ந்து கோப்பாய் மாவீரர் துயிலுமிடத்தில் தீயுடன் சங்கமமாகும். வீரவேங்கைவேணுகோபாலின் நினைவாக அஞ்சலிக் கூட்டமும் இடம்பெறும்.

## மண்டூரில் 3 தமிழர் கோரமாக வெட்டிக்கொலை

(மண்டூர்)

தமிழ்ப்பொதுமக்கள் மூவர் கொல்லப்பட்டதுடன் அவர்களது சடலங்கள் கண்டதுண்டமாக வெட்டப்பட்டு வீதியோரங்களில் கிடக்கக் காணப்பட்டன. மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மண்டூர் பகுதியில் நடைபெற்றிருக்கும் இச் சம்பவத்திற்கு முஸ்லிம் ஊர்காவற்படையினரே பொறுப்பாக இருக்கக் கூடுமென நம்பப்படுகிறது.

## "எதிரிகளின் பாசறையைத் தேடிப் போகிறோம்"

(புங்குடுதீவு)

புங்குடுதீவுப் பகுதியில் நடைபெற்ற திருமண வீடொன்றில் மணப்பெண் வீட்டுக்கு மாப்பிள்ளை சென்றபோது அவரை அழைத்துச் சென்ற நாதஸ்வரக்கலைஞர்கள் "எதிரிகளின் பாசறையைத் தேடிப் போகிறோம்" என்ற புரட்சிப் பாடலை இசைத்தார்களாம். இதனால் "துணையாக வரப்போகும் பெண்ணை எதிரியாகக் கருதி விட்டீரோ" என மாப்பிள்ளையுடன் கூட வந்த அனைவரும் இன்டல் செய் (4 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்


**நியூ வெஸ்ரேரன் எலக்ரோனிக் கோம்**

ரீவி, டெக், றேடியோ, மணிக்கூடு, தினவண்டிகள் மற்றும் எல்லா உபகரணங்களும் திருத்துபவர்களும், விற்பனையாளர்களும், வீடியோ ஸ்டில் படப்பிடிப்பாளர்களும், புதிய பழைய பாடல்களும் (புரப்பிப்பாடல்கள்) பதிவு செய்து கொடுக்கப்படும். ஓட்டுமடம் சந்தி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம். (B-2305)

**உருவச்சிலைகள்**

வெண்கல உருவச்சிலைகள் செய்து கொடுக்கப்படும் விபரங்களுக்கு: சிற்பி. P. சிங்கம் 13, கோவில் வீதி, கண்டிக்குளி, யாழ்ப்பாணம். (R-1318)


# குர்திஷ் கிளர்ச்சியாளர்களை தவறாக நாம்வழிநடத்தவில்லை

**- ஜோர்ஜ்புஷ்**

(கொிரன்)

குர்திஷ் கிளர்ச்சியாளர்களை அமெரிக்கா தவறாக வழி நடத்தவில்லை என அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் கூஸ்ரனில் கடந்த ஞாயிறன்று செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் சதாம் ஹுசைனுக்கு எதிராக கிளர்ச்சியாளர்களுக்கு அமெரிக்கா உதவும் என வாக்குறுதி அளித்ததாக வெளிவந்த செய்தி தவறானது என்றும், ஈராக் தொடர்பாக தமது குறிக்கோள் எட்டப்பட்டதினால் தாம் அதற்கு அப்பால் செல்ல விரும்பவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

# அமெரிக்கப் படைகள் சிலதினங்களுக்குள் வாபஸ்

**- ஜோர்ஜ்புஷ்**

(வாஷிங்டன்)

ஈராக்கில் இருக்கும் தமது இராணுவப் படையினர் இன்னும் ஒரு சில தினங்களில் அங்கிருந்து வெளியேறி விடும் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை கூஸ்ரனில் செய்தியாளர்கள் கூட்டமொன்றில் பேசிய ஜோர்ஜ்புஷ் ஐ.நா. பாதுகாப்புச் சபையின் தீர்மானத்திற்கு அமைய ஈராக் வரவிருக்கும் ஐ.நா. படையினரின் வருகையை அமெரிக்கப்படைகள் எதிர்பார்த்து நிற்பதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை ஈராக்கின் உள் விவகாரங்களில் அமெரிக்கா தலையிடாது என்றும் அதே நேரம் குர்திஷ் இன மக்களுக்கான உணவு விநியோகத்தை மேற்கொள்ளப் போவதாகவும் ஜோர்ஜ்புஷ் தெரிவித்தார்.

## மரண அறிவித்தல்

### திருமதி சந்திரசேகரம் மாணிக்கம்

மீசாலை உப அஞ்சல் அதிபரும், நாராயணா ஸ்ரோர்ஸ் ) கோகிலன் ரேட்ஸ் ஆகிய வர்த்தக நிறுவனங்களின் உரிமையாளர் இரவீந்திரன், இரதிதேவி, இரஞ்சினி ஆகியோரின் அன்புத்தாயாரும், சிவசம்பு (இல்மனைற் தொழிற்சாலை, புல்மோட்டை), சாந்தினி, நடராசா (நில அளவையாளர் சவுதி அரேபியா) ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற நாகலிங்கம் சந்திரசேகரத்தின் அன்பு மனைவியுமாகிய மாணிக்கம் 8-4-91 திங்கள் இரவு காலமானார். பூதவுடல் 9-4-91 செவ்வாய் பிற்பகல் வேம்பிராய் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இத்தகவலை உற்றார், உறவினர், அன்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை (R-1319)

தகவல்: இரவீந்திரன்

## மஹோற்சவம்

(புங்குடுதீவு)

'ஈழத்து இராமேஸ்வரம்' என சிறப்பிக்கப்படும் புங்குடுதீவு பரணாவிடை சிவன் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் இம்மாதம் 28ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துநாட்களுக்கு நடைபெறும். அடுத்தமாதம் 5ஆம் திகதி வேட்டைத்திருவிழாவும் 6ஆம் திகதி இரதோற்சவமும் நடைபெற்று 8ஆம் திகதி பூங்காவனத் திருவிழாவுடன் மஹோற்சவம் நிறைவுபெறும்.

## நினைவு கூருகின்றோம



**சின்னரவி**

(ஆ. புவனேஸ்வரன் அரியாலை)

**1991 - 04 - 10**

1988 ஆம் ஆண்டு இதேதினத்தில் முக்கொம்பன் பகுதியில் இந்திய இராணுவத்தினரின் முற்றுகையின் போது தன்னைத்தானே சுட்டு வீரமரணமடைந்த

கப்டன் நிக்ஸன் (யோவான் பத்திநாதன் - நறுவலிக்குளம்)

இதே ஆண்டு கடவானையில் சிறிலங்கா படையினர் மேற்கொண்ட முற்றுகையின் போது வீரமரணமடைந்த

ஜானி (செபஸ்தியான் ஜெயராசா - யாழ்ப்பாணம்)

அர்ச்சுனன் (வைரமுத்து கனகரத்தினம் - அலம்கேணி)

ராஜ்குமார் (கந்தசாமி சச்சிதானந்தம் - ஆலங்கேணி)

2ஆம் லெப் மணாளன் (தியாகராசா குகன் - சிப்பித்திடல், தம்பலகாமம்)

இதேஆண்டு வேராவிலில் இந்தியப்படையினரும் தேசத்துரோகிகளும் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது வீரமரணமடைந்த

சின்னரவி (ஆ. புவனேஸ்வரன் - அரியாலை)

இதே ஆண்டு வீரமரணமடைந்த

காசன் (பெ. குமாரவேல்)

கோபு (சு. தர்மராசா)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

**- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(B/2330)


விடியலைத்தேடி நின்ற வீரத்தாய்

# அன்னை பூபதிக்கு எங்கள் இதய அஞ்சலிகள்

**"தங்கமஸ்" மருந்துக்கடை**
இல: 635, பருத்தித்துறை வீதி,
முத்திரைச்சந்தி,
யாழ்ப்பாணம்.

**"ராஜா ஸ்ரோர்ஸ்"**
இல: 218, பலாலி வீதி,
கந்தர்மடம் சந்தி,
யாழ்ப்பாணம்.

**ராஜன் கூல்பார்**
அரசடி வீதி,
கந்தர்மடம் சந்தி,
யாழ்ப்பாணம்.

**சிவானந்தா கபே**
இல: 648, பருத்தித்துறை வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.



- பத்திரிகை விற்பனையில் முன்னணி ஸ்தாபனங்கள்.

**அம்பிகா ரேடிசென்ரர்**
பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

**சிவன் ஸ்ரோர்ஸ்**
இல: 340, பல்கலைக்கழக சந்தி,
யாழ்ப்பாணம்.

**சாந்தி ஸ்ரோர்ஸ்**
இல: 37, சிவப்பிரகாசம் வீதி,
யாழ்ப்பாணம்.

**தவம் ஸ்ரோர்ஸ்**
இல: 1004, நாச்சிமார்கோயிலடி,
யாழ்ப்பாணம்.

(B-2345)

### ❀ சிந்தனைக்கு ❀

அனைவரிடமும் கருணை காட்ட வேண்டும்
ஆனால், எல்லோரிடமும் நெருங்கிப் பழகுவது
உசிதமல்ல.

— தாமஸ்; ஏ. கெம்பிஸ்

ஈழநாதம்

61, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்; 10.04.1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05

# புதிய இந்திய அரசுடன் கைகுலுக்கும் முயற்சி

இந்திய சிறிலங்கா வெளியுறவுச் செயலாளர்கள் மட்டத்திலான பேச்சுவார்த்தை நேற்று முன்தினம் டில்லியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தப் பேச்சுவார்த்தைகள் இந்திய வெளியுறவுச் செயலாளர் முஸ்குந்துபே தலைமையிலான குழுவிற்கும் சிறிலங்கா வெளியுறவுச் செயலாளர் பெர்னாட் திலகரட்னா தலைமையிலான குழுவிற்குமிடையில் ஆரம்பிக்கப்பட்டன.

இந்தப் பேச்சுவார்த்தையின்போது சிறிலங்கா– இந்திய பொருளாதார கூட்டுறவை வலுப்படுத்துவது தொடர்பாகவும், இந்திய – சிறிலங்கா வர்த்தகத்தில் உள்ள ஏற்ற இறக்கங்களைசீர்செய்வது தொடர்பாகவும், இந்திய முதலீட்டை சிறிலங்காவில் ஊக்குவிப்பது தொடர்பாகவும் பிரதானமாகப் பேசப்படும். அதேவேளை, இலங்கையில் தேசிய இனப்பிரச்சினை தொடர்பாகவும் சிறிதளவு ஆராயப்படலாம் எனவும் தெரிய வருகின்றது.

அத்தோடு இவ்வாண்டின் இறுதியில் நடைபெற உள்ள இருநாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் மட்டத்திலான கூட்டுக்குழு கூட்டத்திற்கான அணுகுமுறைகள் பற்றியும் இச்சந்திப்பின்போது ஆராயப்படும் எனவும் தெரியவருகின்றது.

1987 ஆம் ஆண்டு இந்திய – சிறிலங்கா சமாதான உடன்படிக்கையில் இலங்கையில் நிலவிய தமிழர் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதைவிட சிறிலங்காவுடனான வர்த்தக உறவிற்கே இந்தியா முதன்மை அளித்தது; இதன் மூலம் சிறிலங்காவுடனான வர்த்தகத்தைப் பெருக்கிக் கொள்ளவும், முதலீட்டை அதிகரிக்கவும் இந்தியா முயற்சித்தது.

ஆனால், இனப்பிரச்சினையில் இந்தியாவை எவ்வாறு பயன்படுத்துதல் என்பதிலேயே சிறிலங்கா அக்கறை காட்டியது. அதற்காக தமிழ் மக்களுக்கும் இந்தியாவிற்கும் இடையில் முரண்பாடுகளை வளர்ப்பதிலும் அக்கறையாக இருந்தது. இதில் வெற்றியும் கண்டது;

இதேவேளை இந்தியாவில் ஏற்பட்ட அரசியல் மாற்றம் இந்திய-சிறிலங்கா உறவில் ஒருமந்த நிலையை ஏற்படுத்தியதெனலாம். அத்தோடுஇந்தியா தனது உள்நாட்டுப்பிரச்சினையில்மூழ்கிப்போய்விட்டது. சிறிலங்காவுடன் வர்த்தக உறவைச் சீர்செய்ய வி. பி. சிங் அரசாங்கம் முயற்சித்தாலும் அதற்கான காலஅவகாசம் இன்மையால் அது நடைபெறவில்லை.

அதேவேளை சிறிலங்காவும் இந்தியாவுடனான வர்த்தகத்தில் பெரியளவில் அக்கறை எதையும் காட்டவில்லை. 1987 ஆம் ஆண்டு ஒப்பந்தம் கைச்சாத்தான போது இருந்தநிலைகூட அடுத்துவந்த ஆண்டுகளில் இருக்கவில்லை. நிலைமை ஜே வி.பியின் கிளர்ச்சியால் மேலும் சீர்கேடடைந்தது. இந்திய மைசூர்பருப்பிற்கும், பம்பாய் வெங்காயத்திற்கும் கூட பெயர்மாற்றம் செய்ய வேண்டியநிலை உருவாகியது. இந்திய முதலீடுகளுக்கும் சேதம்விளைவிக்கப்பட்டது. 1990இல்இந்தியவெளியுறவு அமைச்சர் வி.சி. சுக்லா கொழும்பு வந்த பின்னரே மீண்டும் இப்பொருளாதார வர்த்தகஉறவுதொடர்பான விடயங்கள் மீண்டும் ஆராயப்படத் தொடங்கின.

ஆனால் இன்று சிறிலங்கா தரப்பில் இவ்வர்த்தக உறவு தொடர்பானவிடயம் தீவிரப்படுத்தப்பட்டமைக்கு தனியாக இந்தியாவுடனான வர்த்தக விரிவாக்கம் மட்டும் காரணமல்ல; இந்தியாவில் உருவாகியுள்ள அரசியல் சூழ்நிலையே பிரதான காரணமாகும்.

இந்தியாவில் மே மாத இறுதிக்குள் தேர்தல் நடைபெறவுள்ளது. இந்தியாவில் யார் பதவிக்கு வருவார்கள் என்பது திட்டவட்டமாகக் கூறமுடியாவிட்டாலும் காங்கிரஸ் கட்சித் தலைவர் ராஜீவ் காந்தி ஆட்சிக்கு வரும் பட்சத்தில் சிறிலங்காவுடனான உறவில் மீண்டும் ஒரு புதிய அத்தியாயம் திறக்கப்படும் என்பது மட்டும் உண்மை.

இந்த அத்தியாயம் கடந்தகால இலாப நட்டங்களைக் கருத்திற்கொண்டதாகவே இருக்கும். இந்நிலையில்தான் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா அரசாங்கத்தின் வெளியுறவுக் கொள்கையில் இருந்து சற்று மாறுபட்ட போக்கில் கொள்கையை வகுத்திருக்கும் இன்றைய சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவின் அரசாங்கம் இந்த இடைக்காலத்தில் இந்தியக் காபந்து அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தையைத் தொடங்கியுள்ளது.

அதாவது இப்பேச்சுவார்த்தை வர்த்தக ரீதியானது என்பதைவிட, இந்தியாவில் வரப்போகும் அரசாங்கத்துடன் உறவைச் சீர்செய்யும் முன்னோடி நடவடிக்கை எனக் கூறுவது பொருத்தமானதாகும்.

## மகஸீன் சிறைச்சாலையில்

# 330 தமிழர்கள் தடுத்துவைப்பு

(கொழும்பு)

கொழும்பு மகஸீன் சிறைச்சாலையில் வடக்கு-கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த 330 தமிழர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இச்சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டு, சமீபத்தில் விடுதலை செய்யப்பட்ட அரச அதிகாரி ஒருவர் ஈழநாதத்திற்கு இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

மகஸீன் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளில் பெரும்பாலானோர் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், இதில் பாதிபேர் ஒருவரும் உள்ளார் என்றும் விடுதலை பெற்று வந்தவர் மேலும் தெரிவித்தார்,

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த கைதிகளில் பலர் முஸ்லிம் குழுக்களினால் காட்டிக் கொடுக்கப்பட்டவர்கள் என்றும் கூறப்பட்டது.

வங்கி ஊழியர் ராஜேந்திரா (மட்டக்களப்பு) மகேசன் (ஓமந்தை) ரவி மட்டக்களப்பு) ஆகியோர் தடுத்து வைக்கப்பட்டவர்களில் சிலர் என்றும் தெரிவிக்கப்பட்டது; (தி)

# வவுனியாவில் கிராமங்களுக்கு மக்கள் திரும்புகிறார்கள்

(வவுனியா)

வவுனியாவில், கடந்த வாரம் இடம்பெற்ற இராணுவத்தாக்குதல்நடவடிக்கைக்கு அஞ்சி, சாளம்பைக்குளம் இயங்கறாவூர் பூவரசம்குளம் பம்பைமடு ஆகிய பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து சென்ற பொதுமக்கள் தற்போது தத்தம் இடங்களில் மீண்டும் வந்து குடியமர்வதை காணக்கூடியதாகவுள்ளது.

சமீபத்தில், ஆரினால் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டு மேற்படி இடங்களில் இராணுவத்தினரால் பாரிய தாக்குதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது தெரிந்ததே. (தி)

### வருடாந்த மஹோற்சவம்

புங்குடுதீவு இறி கண்ணகை அம்மன் கோயிலின் வருடாந்த மஹோற்சவம் வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகின்றது; இந்த உற்சவம் 15 நாள்தொடர்ந்துநடைபெறும் என்றும் ஆலயபரிபாலன தர்மகர்த்தாசபைதெரிவித்துள்ளது

# எதிர்வரும் ஜூன் மாதத்தில் பயிலுனர் ஆசிரியர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் கடமையாற்றும் தொண்டர் ஆசிரியர்களுக்கான பயிலுனர் ஆசிரியர் நியமனம் எதிர்வரும் ஜூன் மாதத்தில் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தெரிவு செய்யப்பட்டோர் பட்டியல் மூன்று மாதங்களுக்கு முன்னர் கல்வித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ள போதும் இதுவரை இவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் நடைபெறாதிருப்பது தெரிந்ததே.

இந்த ஆசிரியர் தெரிவில் குழறுபடிகள் நடைபெற்றிருக்கலாம் என்ற சந்தேகத்தில் இப்பட்டியல்கள் உரிய கோட்டக் கல்வி அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் அதனை ஆராய்ந்து உறுதிசெய்யும் பட்சத்தில இவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் நடைபெறும் எனவும், அதன் பின்னர் இவர்களுக்கான நியமனங்கள் வழங்கப்படும் எனவும் கல்வி அதிகாரி தம்பிராசா தெரிவித்தார்;

உயர்தரப் பரீட்சைக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதால் அவை முடிவடைந்த பின்னரே இவர்களுக்கான நேர்முகப்பரீட்சைகள் நடைபெறும் எனவும் பெரும்பாலும் ஜூன் மாதத் தொடக்கத்தில் இவர்களுக்கான ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படும் எனவும், அனுப்பப்பட்ட பட்டியலில் உள்ளோரில் 200க்கு மேற்பட்டோர் கடந்த கால பயிலுனர் ஆசிரியர்களாகத் தெரிவு செய்யப்பட்டுவிட்டதாகவும் எஞ்சியோருக்கே நியமனம் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# இந்தியத் தேர்தலில் பெருமளவு வன்செயல்கள்

### .. சேஷன்

(டில்லி)

அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் இந்திய பொதுத் தேர்தலில் பெருமளவு வன்செயல்கள் இடம் பெறும் என்று தான் அஞ்சுவதாக இந்தியாவின் பிரதம தேர்தல் ஆணையாளர் ரீ.என்.சேஷன் தெரிவித்துள்ளார்; சந்திரிகாவின் பத்திரிகையாளர் மத்தியில் பேசிய அவர், பொதுத் தேர்தல் சுதந்திரமாகவும், நியாயமான முறையில இடம்பெற மாட்டாதென்றும் தெரிவித்தார்;

# சமாதானமாக இருக்கவே இந்தியா விரும்புகின்றது

### வெங்கட்ராமன்

(டில்லி)

இந்தியா தனது அயல்நாடுகளுடன் சமாதானத்துடனேயே இருக்க விரும்புகின்றது; ஆனால்இதற்காக தனது தன்னாதிக்கத்திற்கு எந்த வகையிலும் பங்கம் ஏற்படுவதற்கு இடம் தராது என்று இந்திய ஜனாதிபதி ஆர்.வெங்கட்ராமன் தெரிவித்துள்ளார்;

நேற்றுமுன்தினம் ஜம்முவில் நடைபெற்ற இந்தியாவின் 64ஆவது குதிரைப்படைப்பிரிவின் வெள்ளி விழாநிகழ்ச்சியின் போது உரையாற்றுகையில் இவ்வாறுதெரிவித்தார்; அயல் நாடுகளுடன் இதுவரை தீர்க்கப்படாத பிரச்சினைகளை பேச்சு வார்த்தை மூலமே இந்தியா தீர்த்துக் கொள்ளும் என்றும் அவர் தெரிவித்தார்.

### மாரடைப்பால் மரணம்

கொழும்பு செல்வதற்காக கடந்த பத்து நாட்களுக்கு மேலாக வவுனியாவில் தங்கியிருந்தமானிப்பாயைச்சேர்ந்த குடும்பஸ்தரொருவர் கடந்த ஞாயிறன்று மாரடைப்பால் மரணமாகியுள்ளார்;

## அன்னை பூபதி நினைவஞ்சலிக் கூட்டம்

யாழ் பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகத்தின் ஏற்பாட்டில் இன்று (10-4-91, பி. ப 3-00 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் அன்னை பூபதியின் மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் நடைபெறவுள்ளது. இந் நினைவுக் கூட்டத்தில் மாணவப் பிரதிநிதிகளும, விரிவுரையாளர்களும் உரையாற்றவுள்ளனர்.

## 45 நோயாளர்கள் நேற்றுமுன்தினம் கொழும்பிற்கு

(செ. த. ம)

விசேட சிகிச்சைக்காக 45 நோயாளிகள் நேற்று முன்தினம் பருத்தித்துறை துறைமுகத்தில் இருந்து கொழும்பிற்கு கப்பல் மூலம் அழைத்துச் செல்லப்பட்டனர்; (85)

## சுதேச வைத்திய அபிவிருத்திச் சங்கம்

(கைதடி)

கடந்த மார்ச்மாதம் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று சித்த மருத்துவத்துறை விரிவுரை மண்டபத்தில் சுதேச வைத்தியர்கள். மாணவர்கள், விரிவுரையாளர்கள், நலன்விரும்பிகள் ஆகியோர் கூடி சுதேச வைத்திய அபிவிருத்திக்கு தம்மால் ஆன சகல முயற்சிகளையும் மேற்கொள்வதற்காக சுதேச வைத்திய அபிவிருத்திச் சங்கத்தைத் தெரிவு செய்துள்ளனர்.

இதற்கு தனியார் வைத்தியர்கள், பரம்பரை வைத்தியர்கள், தனியார் நிறுவனங்கள், பல்கலைக்கழக சித்த மருத்துவ துறையினர் திணைக்களங்கள் ஆகியோரிடமிருந்து ஆலோசனைகளையும் அவற்றுக்குள்ள குறைபாடுகளையும் அறிய விரும்புகின்றது.

மேலும் இச்சங்கத்தால் சுதேசியன் எனும் பத்திரிகையும் வெளியிட இருப்பதால் மக்களுக்கு பயன் படக்கூடிய விதத்தில் மருத்துவத்துறை சம்பந்தமான தகவல்களையும் அனுப்பி உதவுமாறு அதன் செயலாளர் ஐ ஜெயநாமகணேசன் அறிவித்துள்ளார்.

## தொகுதித் தெரிவுப் பேச்சு

(சென்னை)

நாடாளுமன்றத் தேர்தலிலும், சட்டமன்றத் தேர்தலிலும் போட்டியிடும் தொகுதிகளைக் கண்டறியும் முகமாக இந்திரா காங்கிரஸுக்கும், அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் இடையே பேச்சுவார்த்தைகள் இன்று மீளவும் ஆரம்பமாகும். இந்த இருகட்சிகளுக்குமிடையே இதுவரை இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் குறித்து இந்திரா காங்கிரஸ் மேலிடத்துக்குத் தெரிவிப்பதற்காக தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி நேற்று டில்லி புறப்பட்டார்;

திராவிட முன்னேற்றக் கழகமும் அதன் தோழமைக் கட்சிகளுடன் தொகுதி பங்கீடு தொடர்பாக இன்று தொடர்ந்தும் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளது;

# முறைப்படி போர் நிறுத்தம் இன்று ஐ. நா. அறிவிக்கும்?

(நியூயோர்க்)

வளைகுடாப் பிரதேசத்தில் முறைப்படியான போர் நிறுத்தம் ஒன்றை ஐ. நா. பாதுகாப்புச்சபை இன்று அறிவிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஐ. நா. பாதுகாப்புச் சபையின் தீர்மானத்தை ஈராக் ஏற்றுக் கொண்டதைத் தொடர்ந்து ஐ. நா. பாதுகாப்புச்சபை நிரந்தரப் போர் நிறுத்தத்தை அறிவிக்க உள்ளது.

## குர்திஷ் அகதிகளுக்கு

# ஐரோப்பிய பொருளாதார சமூகம் 18 கோடி டாலர்கள் உதவி

(பிரஸ்ஸல்ஸ்)

ஐரோப்பிய பொருளாதார சமூக நாடுகள் குர்திஷ் இன அகதி மக்களின் நிவாரண நடவடிக்கைகளுக்கென 18 கோடி டாலர்களை வழங்குவதாகத் தெரிவித்துள்ளன.

அத்துடன் வடக்கு ஈராக்கில் குர்திஷ் மக்களுக்குத் தனிப்பகுதி ஒன்று அமைத்துக்கொடுக்கும் பிரித்தானியாவின் யோசனை ஒன்றையும் இந்த அமைப்பு ஏற்றுக் கொண்டுள்ளது.

## அமெரிக்கா ஈராக்கிற்கு எச்சரிக்கை

# நிவாரணப் பணிகளில் குறுக்கிட வேண்டாம்

(அங்காரா)

குர்திஷ் இன மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணப் பணிகளில் குறுக்கிட வேண்டாம் என ஈராக்கை அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ் பேக்கர் எச்சரித்துள்ளார்.

வீடுகளை இழந்திருக்கும் 5 இலட்சத்திற்கும் அதிகமான குர்திஷ் மக்களின் பிரச்சினைகளை ஆய்வு செய்ய சென்ற ஜேம்ஸ் பேக்கர் இந்த எச்சரிக்கையினை விடுத்துள்ளார்.

இதேநேரம் விமானம் மூலம் குர்திஷ் மக்களுக்கு உணவு விநியோகம் மேற்கொள்ளும் அமெரிக்க நடவடிக்கைகளை ஈராக் கண்டனம் செய்திருக்கிறது.

---

இன்ஸ்பெக்டர்

இத் தாக்குதல் சம்பவத்தை உறுதிப்படுத்திய சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் கொல்லப்பட்ட ஒன்பது பேரில் ஒருவர் இன்ஸ்பெக்டர் எனத் தெரிவித்தன.

---

எதிரிகளின

தார்ஜனாம். அர்துடன் மணமக்களுக்கு சீதனமாக வழங்கப்பட்ட வயலொன்றை கடந்து சென்றபோது "இந்த மண் எங்களின் சொந்தமண்" என்ற பாடல் இசைக்கப்பட்டதாம். (22)

---

சிறீலங்கா

நீதிமன்றத்தில் விசாரிக்கப்படவுள்ளனர். மாலைதீவில் உள்ள சிறிலங்கா உயர்ஸ்தானிகர் இவர்களது நலன்களைக் கவனித்துக்கொள்ளவுள்ளார். மாலைதீவுக் கடலினுள் பிரவேசிக்க வேண்டாமென இலங்கை மீனவர்களைச் சிறிலங்கா வெளியுறவு அமைச்சர் கோரியுள்ளார்.

---

விண்ணப்பங்கள்

ஏதுமே புதிய விண்ணப்பங்களைப் பெற முடியாதிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

கொழும்பிலிருந்து புதிய அத்தாட்சிப் பத்திரங்கள் வந்ததும் பிறகு அத்தாட்சிப் பத்திரங்கள் வழங்கும் வேலை மீண்டும் ஆரம்பமாகும் எனவும் அதன்பின்பே புதிய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ச)

---

## அருவை 89 தாக்குதல்

வவுனியா மாவட்டத்தில் உள்ள தாண்டிக்குளம் இராணுவ முகாம் காவலரணிற்கு விடுதலைப்புலிகள் கடந்த ஞாயிறன்று இரவு 8-30 மணியளவில் அருவை 89 தாக்குதல் மேற்கொண்டனர். இராணுவ தரப்பில் சேதவிபரம் தெரியவில்லை.

---

போருக்குத்

தயாரிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

மன நிபந்தனைகள் எதுவுமில்லாமல் இலங்கை அரசு பேச்சுவார்த்தைக்கு வருமானால் தமிழீழ விடுதலைப் புலிகள் பேசத் தயாராக இருப்பதாகவும் திரு. திலகர் கூறியுள்ளார். இலங்கை அரசு தமிழ் மக்களுக்கு எதையுமே வழங்காது தமிழ் மக்களுக்கு வழங்க எதுவுமேயில்லையென அனைத்துலக அரங்கிற்குக் காட்ட முயலுவதாக திரு திலகர் மேலும் குறிப்பிட்டார்.

---

# மோகந்தா இராஜினாமா

(டிஸ்பூர்)

அசாம் கண பரிஷத்தின் தலைவர் பிரபுல்ல குமார் மொகந்தா கட்சிப் பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்.

நேற்று முன்தினம் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய பிரபுல்ல குமார் மொகந்தா கட்சி மற்றும் மாநிலத்தின் நலனைக் கருதி தாம் இந்த முடிவினை எடுத்ததாகக் குறிப்பிட்டார்.

## பாலஸ்தீனியர் விடுதலை

(டெல்அவிவ்)

ரமிசான் பண்டிகையை ஒட்டி ஆயிரக்கணக்கான பாலஸ்தீனியர்களை விடுதலை செய்யப்போவதாக இஸ்ரேல் அரசாங்கம் அறிவித்துள்ளது. 16 000 பாலஸ்தீனியர்கள் இஸ்ரேலிய சிறைச்சாலைகளில் உள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## சங்கக் கிளையில் திருட்டு

(செ. த. மை)

வலி. கிழக்கு தென்பகுதி ப. நோ. கூ. சங்கத்தின் உரும்பராய்ச் சந்தியிலுள்ள கிளை நிலையத்தில் சுமார் 15 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினமிரவு இத் திருட்டுச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

இத்திருட்டுச் சம்பவம் தொடர்பான இலவ முகாமையாளர் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் உரும்பராய்ப் பொறுப்பாளர் அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

## மினிபஸ்கள் சேதம்

(பூநகரி)

பூநகரியில் ஹெலிகொப்டர்த் தாக்குதல் பிரயோகம் செய்ததில் இரு மினிபஸ்கள் சேதமாக்கப்பட்டன. நேற்றுமுன்தினம் காலை ஆறுமணி தொடக்கம் சுமார் அரைமணி நேரம் பூநகரி ஆலடிச்சந்திக்கு சமீபமாக இத்தாக்குதல் நடந்தது.

---

ஆயுதப்படையினர்

மிக அலை நிதுள்ளது?

அதேதினத்தன்று ஈச்சிலம்பற்றை இராணுவத்தினர் பூநகரி பாடசாலையில்வைத்து இரண்டு பெண்களை சுட்டுக் கொன்றுள்ளனர். இவர்கள் ருக்குமணி (வயது 28) தம்பலகாமத்தைச் சேர்ந்தவர். தங்கமணி ஈச்சிலம்பற்றையைச் சேர்ந்தவர்.

மேலும் வெருகல் முகத்துவாரத்தில் இருந்த கிலிவெட்டிக்கு மீன் வியாபாரம் செய்யச் சென்ற ஆறுபேர் தமது வீடுகளுக்கு திரும்பவில்லை. இவர்கள் இராணுவத்தாலோ, பொலிசாராலோ கைது செய்யப்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது. அறுவரின் பெயர்விபரமும் வருமாறு:

ஆறுமுகம், (வயது 48 வெருகல்) மாணிக்கம், (வயது 36 வெருகல்) கிஜுசன் (வயது 35 வெருகல்) வேலாயுதம் (வயது 60 வெருகல்) கோபாலபிள்ளை, (வயது 40 வெருகல்) செய்வேந்திரன் (வயது 25 வெருகல்)

இதற் சம்பவம் நடைபெற்ற அடுத்தநாள் ஆறாம் திகதி ஈச்சிலம்பற்றை இராணுவத்தினர் கறுக்காய்முனையைச் சேர்ந்த மூன்று தமிழர்களை சுட்டுக்கொன்றுள்ளனர். இவர்கள் கட்டைமன், அருமைநாயகம், கோணலிங்கம் ஆகியோராவர்.

மேலும் அதேதினத்தில் ஈச்சிலம்பற்றை இராணுவத்தினர் கறுக்காய்முனை என்ற இடத்தில் அமைந்திருந்த தமிழ் பொது மக்களின 55 வீடுகளை முற்றாக எரித்து நாசமாக்கியுள்ளனர். இதில் பதினைந்து குடிமனைகள், நாற்று மேட்டுகள் என்பனவும் அடங்கும்.

---

# 25 பாஸ்போட்டுகளுடன் 4 தமிழர் கொழும்பில் கைது

(கொழும்பு)

கொழும்பில் நான்கு தமிழ் இளைஞர்கள் கொச்சிக்கடை பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த இளைஞர்கள் கொச்சிக்கடைப் பகுதியில் இருந்த வீடொன்றில் இருந்தே கைது செய்யப்பட்டனர் என்றும், இவர்களுடன் 25 பாஸ்போட்டுகளும் கண்டு பிடிக்கப்பட்டன என்று கொச்சிக்கடைப் பொலிசார் தெரிவித்தனர்.

# புலமைப்பரிசில் விடைத்தாள் றெட்பானா உதவியுடன் சென்றது

(யாழ்ப்பாணம்)

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை விடைத்தாள் றெட்பானாவின் உதவியுடன் கொழும்பிற்கு அனுப்பிவைக்கப்பட்டது.

கடந்த மாதம் 30 ஆம் திகதி யாழ். மாவட்டத்தில் நடைபெற்ற ஐந்தாம் ஆண்டு மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை விடைத்தாள்கள் கடந்த ஒருவாரமாக சிறிலங்கா அரசின் ஊரடங்கு உத்தரவால் அனுப்ப முடியாத நிலையில் இருந்தது. நேற்று முன்தினம் அவை றெட்பானாவின் உதவியுடன் அனுப்பி வைக்கப்பட்டதாக யாழ். கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ச)

# யாழ். மாவட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு கிடைத்தது

(யாழ்ப்பாணம்)

1991 ஆம் ஆண்டுக்கான பன்முகப் படுத்தப்பட்ட வரவு, செலவுத்திட்டத்தின்கீழ் யாழ். மாவட்டத்திலுள்ள அரச திணைக்களங்களின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு கிடைத்துள்ளது.

மேற்படி நிதி ஒதுக்கீட்டுத் திட்டத்தின்கீழ் மக்கள் சேவைகள் திணைக்கள திற்கு 15 இலட்சம் ரூபாவும், நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு ஒரு இலட்சத்து எண்பதினாயிரம் ரூபாவும், விவசாய அபிவிருத்திப் பகுதியினருக்கு 14 இலட்சத்து எண்பதினாயிரம் ரூபாவும், சுகாதார சேவைகள் திணைக்களத்திற்கு 17 இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவும், கிராம அபிவிருத்தி அதிகாரசபைக்கு 17 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாவும், வீதி அபிவிருத்தித் திணைக்களத்திற்கு பத்து இலட்சம் ரூபாவும், கடற்றொழில் திணைக்களத்திற்கு 15 இலட்சம் ரூபாவும், கால்நடை அபிவிருத்தித் திணைக்களத்திற்கு பத்து இலட்சம் ரூபாவும், உள்ளூராட்சித் திணைக்களத்திற்கு 30 இலட்சம் ரூபாவும். கல்வித்திணைக்களத்திற்கு 17 இலட்சம் ரூபாவும் வனபரிபாலன திணைக்களத்திற்கு நான்கு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவும், சமூகசேவை திணைக்களத்திற்கு மூன்று இலட்சத்து 20 ஆயிரம் ரூபாவும், காணி பயன்பாட்டுத் திணைக்களத்திற்கு 40 ஆயிரம் ரூபாவும், தொழில்நுட்பக் கல்லூரிக்கு இரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவும் கிடைத்துள்ளது.

மதிப்பீட்டு அறிக்கை கோரல்:

மேற்படி திணைக்களங்களும் சபைகளும் தாம் மேற்கொள்ளவிருக்கும் செயற் திட்டங்கள் பற்றி அறிவித்த போதிலும் திட்டங்கள் பற்றி விரிவான மதிப்பீட்டு அறிக்கை சமர்ப்பிக்கவில்லை. இதனால் செயலக திட்டமிடல் பகுதி மதிப்பீட்டு அறிக்கைகளை திணைக்களங்களிடம் கோரியிருக்கிறது.

இந்த அறிக்கைகள் திட்டமிடல் பகுதியின் தலைமை அலுவலகத்தின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டு அனுமதி கிடைத்த பின்னரே மேற்படி அனைத்து செயற்திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக செயலக அதிகாரிகள் தெரிவித்தனர். (ச)

# ஜோர்ஜியா குடியரசும் சுதந்திரப் பிரகடனம்

(மாஸ்கோ)

சோவியத் யூனியனிலுள்ள ஜோர்ஜியா மாநிலமும் தனிநாடென்னும் சுதந்திரப்பிரகடனத்தை நிறைவேற்றியுள்ளது. சோவியத் யூனியனில் கடந்த மார்ச் 31 ஆம் திகதியன்று இடம்பெற்ற கருத்து வாக்கெடுப்பில் தொண்ணூறு சதவீதமான ஜோர்ஜியர்கள் தனிநாடு கோரிக்கைக்கு ஆதரவளித்ததையடுத்து ஜோர்ஜியா நாடாளுமன்றம் மேற்படி தீர்மானத்தை நிறைவேற்றியது.

மேலும் 1926 ஆம் ஆண்டு மே மாதம் உருவாக்கப்பட்ட ஜோர்ஜியா ஜனநாயகக் குடியரசை மீண்டும் புனரமைக்கப் போவதாக ஜோர்ஜியத் தலைவர் அறிவித்துள்ளார்.

சோவியத் தலைமைப்பீடம் நெருக்கடியைச் சந்தித்துவரும் இக்கட்டத்தில் உள்நாட்டு போரை நடாத்தாமல் நல்லெண்ண உறவை வளர்த்துக் கொள்ள விரும்பும் எனத் தாம் நம்புவதாக ஜோர்ஜியாவின் குடியரசுத் தலைவர் கூறியுள்ளார்.

## கேரளா சட்டசபையிலும் தேர்தல்

(டில்லி)

கேரளத்தில் லோக்சபைக்கான தேர்தலுடன் சட்டசபைக்கான தேர்தலும் நடைபெறும் என்ற தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது. தமிழநாடு, மேற்குவங்காளம், உத்தரப்பிரதேசம், ஹரியானா, பாண்டிச்சேரி ஆகிய மாநிலங்களிலும் லோக்சபைத் தேர்தலுடன் சட்டசபைகளுக்கான தேர்தல்களும் இடம்பெறும்.

அஸாம், பஞ்சாப், ஜம்மு காஷ்மீர் மாநிலங்களில் தேர்தல் நடத்துவதா என்ற முடிவு அடுத்த வாரமளவில் வெளியிடப்படும்.

## சைக்கிள் திருட்டு

(புங்குடுதீவு)

கோட்டையைப் பார்க்கச் சென்றவரின் சைக்கிள் களவாடப்பட்டுள்ளது. இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. கொக்குவில் சோசேனில் வசிக்கும் ஞா. கமலஹாசன் என்பவர் அன்றையதினம் தனது தமக்கையாருடன் கோட்டையைப் பார்ப்பதற்காகச் சென்று கோட்டை வாசலில் சைக்கிளை நிறுத்திவிட்டு உள்ளேசென்றுப் பார்வையிட்டபின் திரும்பி வந்து பார்த்தபோது அவரது றலி சைக்கிள் களவாடப்பட்டிருந்தது.

## ஏலவிற்பனை

(நல்லூர்)

யாழ். போதனா மருத்துவமனையில் எதிர்வரும் 15 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு பகிரங்க ஏலவிற்பனை நிகழ்ச்சி ஒன்று இடம்பெறவுள்ளது. இதில் பாவித்த உபகரணங்கள், தளபாடங்கள் என்பன விற்பனைக்கு வைக்கப்படும். (85)

---

## மரண அறிவித்தல்

### திரு. இரத்தினசபாபதி தேவராசா

காரைநகரைப் பிறப்பிடமாகவும், வவுனியா, சேமமடுக் குளத்தில் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினசபாபதி தேவராசா அவர்கள் (சேமமடு உப தபால் கந்தோர் ஊழியர்) 8-4-91 இல் காலமானார். இவர் கோகாம்பிகையின் அன்புக் கணவரும், விக்னராஜா (சுவிஸ்), தேவராணி, தவயோகினி, ரஞ்சினி (Bond Institute Steno Teacher சுதாகரன் சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தகப்பனுமாவார். அன்னாரின் பூதவுடல் ஈமக்கிரியைகளுக்காக காலை 10 மணிக்கு சேமமடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
S. இராமலிங்கம் (மைத்துனர்)
93/8, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்.

(R-1321)

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.